**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.223/2020**
**Prosecution Witness P.W. 9**

.....

Name : திரு. ஸ்ரீதரன் Calling : காவல் உதவி ஆய்வாளர்

Father's name : திரு. ராஜேந்திரன் (லேட்) Religion : இந்து

Village : மதுரை Age : 58

Taluk : மதுரை

நாள் - **11.02.2026**

**(எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் இரயில்வே இருபபுபாதை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 06.05.2018 ம் தேதி பி1 விளக்குத்தூண் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக வபணியில் இருந்த போது, மாலை 6.00 மணிக்கு சந்திரன் மகன் செந்தில்வேல் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமாக ஒரு புகார் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் **அ.சா.ஆ.7** ஆகும். மேற்படி புகாரின் அடிப்படையில் குற்ற எண். 260/2018 பிரிவுகள் 294 பி, 324, 506(2) மற்றும் பிரவு 3 தமிழ்நாடு சொத்துக்கள் அழிப்புச்சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் தயார செயத் அச்சுப்படி முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும். பின்பு வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சசென்று சாட்சிகள் சமயமுருகன், வீரபாண்டி ஆகியோர் முன்னிலையில் பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வைமகஜர் அ.சா.ஆ.9 ஆகும். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 ஆகும். பின்பு இந்த வழக்கின் சம்பவ இட சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 12.07.2018 ம் தேதி சாட்சிகள் வேல்முருகன், வீரபாண்டி ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கின் எதிரிகள் மணிகண்டன், யோகேஸ்வரன் ஆகியோர்களை கைது செய்த போது, அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தின் எதிரிகள் தங்களை அழைத்து சென்றால், இந்திராநகர் கால்வாய் அருகே மறைத்து வைத்த

பொருளை எடுத்து தருவதாக சொன்னார்கள். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.**11 ஆகும். பின்பு இந்த வழக்கின் எதிரிகள் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதத்தை அடையாளம் காட்டி எடுத்து தந்தார்கள். அதை நான் அத்தாட்சியில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.**12 ஆகும். வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆயுதத்தை படிவம் 95 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 95 ஆனது **அ.சா.ஆ.**13 ஆகும். ஒப்புதல்வாக்குமூலத்தின்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு இந்த வழக்கில் ஐந்து வாகனங்களின் சேதமதிப்பீட்டை பெற்றேன், இந்த வழக்கில் சேதமடைந்த கண்ணாடிகளின் சேதமதிப்பு இரசீது பெற்றேன், மேற்படி இரசீது **அ.சா.ஆ.**14 ஆகும். இந்த வழக்கில் காயமடைந்த செந்தில் என்பவருக்கு சிகிச்சை எடுத்த தனியார் மருத்துவமனையில் விசாரித்து காயச்சான்று வாங்கினேன், மேற்படி காயச்சான்று **அ.சா.ஆ.**15 ஆகும். மேற்படி சான்று வழங்கிய மருத்துவர். கார்த்திக் தற்சமயம் இறந்துவிட்டார். என்னுடைய மேல்விசாரணையை முடித்து வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் ஆஜர் எதிரிகள் தான். என்னிடம் காண்பிக்கப்படும் இரும்பு கம்பி தான் எதிரிகள் பயன்படுத்தியது, அது **சா.பொ.1** ஆகும். எனது விசாரணையில் சாட்சிகள் செந்தில்வேல், ஆஜர் எதிரிகள் சா.பொ.1 ஐ வைத்து தாக்கியும் தன்னுடைய வாகனத்தையும், அங்கு நிறுத்தப்பட்டிருந்த மற்ற வாகனங்களையும் சேதப்படுத்தியதாகவும், தங்களை கொலைமிரட்டல் செய்ததாகவும், சொத்துக்கு சேதம் ஏற்படுத்தியதாகவும், புகாரிலும், விசாரணையிலும் சொல்லியுள்ளார்கள். சாட்சிகள் தனுஷ்கோடி, பிரகாஷ் என்னுடைய விசாரணையில் இந்த வழக்கு சம்பவத்தை தாங்கள் நேரில் பார்த்ததாகவும், காயம்பட்ட செந்திலை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், புலன்விசாரணையில் சொல்லியுள்ளார்கள். சாட்சி விஜயகுமார் எனது விசாரணையில் தன்னுடைய வாகனத்திற்கு எதிரிகள் தாக்கி சேதப்படுத்தியதாக விசாரணையில் சொல்லியுள்ளார். சாட்சிகள் சமயமுருகன் எனது விசாரணையில் சம்பவ இடத்தை நான் பார்த்த போது பாரவைமகஜர், மாதிரி வரைபடம் ஆகியவற்றில் உடனிருந்து கையொப்பம்

இட்டதாக விசாரணையில் தெரிவித்துள்ளார். சாட்சிகள் வேல்முருகன், ரமேஷ் ஆகியோர் எனது விசாரணையில் எதிரிகளை நான் கைது செய்த போது, உடனிருந்ததாகவும், எதிரிகள் தானாக கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தில் உடன் இருந்து கையொப்பம் செய்ததாகவும், பின்னர் எதிரிகள் இந்த வழக்கில் எடுத்து ஆஜர் செய்த ஆயுதத்தை அத்தாட்சியில் கைப்பற்றியதற்கு சாட்சி கையொப்பம் செய்ததாகவும் விசாரணையில் சொல்லியுள்ளார்கள்.

**2, 3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இறுதிஅறிக்கையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து முதல்தகவல்அறிக்கை, பார்வைமகஜர், மாதிரி வரைபடம், அத்தாட்சி ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளிடம் இருந்து எந்த வாக்குமூலமும் பெறப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளிடம் இருந்து எந்த வழக்குச் சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சிகள் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**1 ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

1 ம் எதிரி தரப்பில் மேற்படி 2, 3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.02.12 10:07:28 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.